**பொல்கஹவெல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொல்கஹவெல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பொல்கஹவெல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்குச் சொந்தமான 19 ஏக்கர் அளவிலான ரூபா 11,400,000 பெறுமதியான காணியொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 19,376,591 பெறுமதியான 35 காணிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | காணி மற்றும் கட்டிடங்கள் மூலதனமாக்கப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 4,317,228 தொகையை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்வதற்கு சிக்கலாக இருந்த தாமதமான கட்டிடத்தின் பெறுமதியை மூலதனமாக்க நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி காணியொன்றின் பெறுமதி ரூபா 90,000 குறைத்தும் 04 காணிகளின் பெறுமதி ரூபா 1,799,000 கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்குவேன். | |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்படாத ரூபா 18,998,252 மீதியொன்று வழங்குனர் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 800,000 பெறுமதியான நிர்மாண கடன்கொடுத்தோர் மீதிகள் இரண்டு கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் வியாபார வரி ரூபா 308,920 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்குவேன். | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 557,154 குறைத்தும் ஆண்டின் இறுதியில் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 663,514 உம் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியச் சம்பளம் பணிப்பாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 149,825 பெறுமதியான தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வேன். | |
| (ஏ) | மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டணங்கள் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வு கட்டணத்திற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதியேற்பாடு இல்லாத குறைபாட்டை சீராக்கம் செய்வேன். | |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2015 நவம்பர் 02 ஆந் திகதிய 2015/1 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| • 3(i) பந்தி | சமய தாபனங்களில் ஏதேனும் நிர்மாணமொன்றிற்காக பொருட்கள் அல்லது பணம் நன்கொடையாக வழங்கும் போது ரூபா 20,000 உச்ச அளவுக்கு இருக்க வேண்டிய போதிலும் அந்த எல்லையை மிகைத்து 07 சந்தர்ப்பங்களில் 27 விஹாரைகளுக்கு ரூபா 700,000 தொகை நிர்மாணத்திற்காக நன்கொடை வழங்கப்பட்டிருந்தது. | பிரதேசத்தின் பொதுமக்கள் பிரதிநிதியால் அத்தொகை போதியதாக அல்ல என ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு அந்த சமய தாபனத்திற்கு நிதிரீதியாக நன்கொடை அளிக்கப்பட்டது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| • 8(உ)(i) ஆம் பந்தி | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றியும் சுயேட்சை அமைப்புக்களுக்காக நன்கொடைகளை வழங்கும் போது ரூபா 15,000 இற்கு உட்பட்டு நன்கொடை வழங்கு முடியுமான போதிலும் அந்த ஆலோசனைகளை வழங்காமல் 10 சங்கங்களுக்கு ரூபா 350,000 ஆன நன்கொடை வழங்கப்பட்டிருந்தது. | சங்கங்கள், கழகங்களுக்காக உரிய பொருள் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் போதுமானதாக இல்லாமையால் அந்த குறைபாட்டை சங்கத்தினால் மேற்கொள்வதற்காக நிதியேற்பாடு சங்கத்திற்கு வழங்கப்படுகின்றது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் குறைபாட்டு நிதியை சங்கத்திட மிருந்து பெற்றுக் கொண்டு பெறுகை செய்து பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 98,499,491 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,657,500 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் 7,971 வீதவரி அலகுகளிலிருந்து வீதவரி நிலுவை மீதி ரூபா 15,836,483 ஆக இருந்தது. இந்நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசேடமாக வருமான பரிசோகர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டமை, காணப்பட்ட பொருளாதார சிக்கல், காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமை போன்ற காரணங்களினால் வெளிக்கள வருமான சேகரிப்பு நடவடிக்கை தடைப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய குத்தகைக்கு வழங்கப்பட்ட 04 இறைச்சிக் கடைகளிலிருந்து 2021 நவம்பர் 30 இல் உள்ளவாறு ரூபா 420,650 ஆன குத்தகை தொகை அறவிடுவதற்கு காணப்பட்டது. | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது அந்தந்த வகையில் நிலுவையின்றி வருமானத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | | |
| | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 727,000 ஆன வியாபார வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள நிலுவை அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புறநெகும செயற்திட்டத்திலிருந்தும் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்தும் சபை நிதியத்தின் மூலம் ரூபா 159,251,130 ஆன தொகை செலவிடப்பட்டு 52 கடைகளுடன் கூடிய பொது வியாபார தொகுதி நிர்மாணிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் இந்த ஆதனங்களை குத்தகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் தற்போதைய நிலைமையில் காணப்படும் எதிர்பார்க்காத நிலைமையில் பொது சந்தையினை திறந்து நடவடிக்கை எடுப்பதில் சிக்கல் காணப்படுகின்றது. திறந்து வைப்பதற்கு முதலாவது சந்தர்ப்பத்தின் போது கடைகள் திறக்கப்பட்டு கடை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | பொதுச் சந்தையில் வேலைகள் முடிவுற்ற பின்னர் தொகுதி திறந்து குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருமானம் உழைப்பதுடன் பொதுமக்களுக்கு சேவையும் வழங்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வந்தாவ ஆட்டிறைச்சிக் கடை சபையால் குத்தகைக்காக கேள்வி கோரி குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் கட்டிடத்தின் உரிமையாளருக்கு இறைச்சி விற்கும் உரிமையை வருடாந்தம் ரூபா 594,485 தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | இந்த இறைச்சிக் கடை தொடர்ந்தும் குத்தகைக்கு காணி உரிமையாளரால் வழங்கப்பட்டிருந்தது. இந்த இடம் சபைக்கு குத்தகைக்கு கையேற்றதுடன் இங்கு எந்த தொகையும் கொடுக்கல் வாங்கலொன்றாக இடம்பெறுவதில்லை. அனேகமாக இந்த இடம் சபை மூலம் குத்தகை பெற்றுக்கொள்வது அவருடன் செய்து கொண்டுள்ள | இறைச்சி விற்பனை செய்யும் உரிமை சபைக்குரியது. அதன் பிரகாரம் இறைச்சிக் கடை அமைந்துள்ள கட்டிடத்தை குத்தகைக்கு எடுத்து இறைச்சி விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு வழங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உடன்படிக்கையின் சட்டரீதியான தன்மையை பாதுகாப்பதற்கு என அறியத் தருகின்றேன். | |
| (ஆ) சபைக்குச் சொந்தமான பஸ் நிறுத்துமிடத்தல் சிற்றுண்டிச் சாலையொன்று 2007 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 7,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கடை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,076,859 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்ட போதிலும் இந்நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 திசெம்பர் முதல் இந்த கடையின் பட்டியலிடல் நிறுத்தப்பட்டிருந்ததன் பெயரில் 2019 ஆம் ஆண்டு முதல் 2021 வரை சபைக்கு ரூபா 252,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொல்கஹவெல பொது விளையாட்டரங்களை சபைக்குச் சொந்தமான அசையாத ஆவணமொன்றாக பயன்படுத்தி உடமை கொண்டுள்ள காணப்பட்ட போதும் சீரான உரித்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேம்பாலம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக இந்த பொது விளையாட்டரங்கின் ஒரு பகுதி அரசிற்கு கையேற்கப்பட்டிருந்தது. அந்த ஆதனத்திற்காகஇழப்பீட்டுத் தொகையாக ரூபா 2 கோடி பணம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆதன உரிமையாளர் தொடர்பாக பதிவேடுகள், ஆவணங்கள் இல்லாமை இவ்விளையாட்டரங்கு காணிக்காக வேறு நபர் முன்வந்திருந்ததால் விளையாட்டரங்கின் சீரான உரித்து சபைக்கு இல்லாத காரணத்தினால் | மேம்பாலத்தை நிர்மாணிப்பதற்காக பொது விளையாட்டரங்கின் ஒரு பகுதி அரசிற்கு பொறுப்பேற்றல் அதற்காக இழப்பீட்டுத் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆதனம் உரித்தாளர் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு ஆதனங்கள் இல்லாமை காரணமாக வேறு தனிப்பட்ட நபரொருவர் இந்த காணித் துண்டிற்காக முன்வந்திருந்த காரணத்தினால் உண்மையான உரித்தாளரை இனங்காண்பதற்கும் சீரான ஆரம்பம் முதல் உரிமையாளரை பிரதேச | சபைக்குச் சொந்தமான காணிகளின் சட்ட ரீதியான உரித்தை பெற்றுக் கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இழப்பீட்டுத் தொகை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | செயலாளரால் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. | |

### 3.4 வெளிப்படையான முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணேபொல்வத்த பொது காணியின் 8 ஆம் இலக்க காணிப் பகுதி 48 பேர்ச் அளவிலான பகுதியில் நபரொருவரால் வீடொன்று நிர்மாணிக்கப்பட்டு குடியிருப்பதாக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இந்தக் காணியை சபைக்கு பொறுப்பேற்கப்பட்டு ஏல விற்பனை காணியில் குடியிருக்கும் குடியிருப்போரின் பொது நடவடிக்கைக்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொது நடவடிக்கைகளுக்காக குடியிருப்பாளர்கால் எந்தவொரு வேண்டுகோளும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. இந்தக் காணியின் மேலும்02 பகுதிகள் சபையின் பொறுப்பில் உள்ளன. | பொது நடவடிக்கை களுக்காக கிடைத்துள்ள காணியை பாதுகாப்பதற்கும் சபை உத்தியோகத்தர் கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இக்காணியின் 48 பேர்ச் அளவிலான பகுதி நபரொருவர் அத்துமீறி குடியிருக்கின்றார். அதை அகற்ற வேண்டும். |
| (ஆ) கொடவல பட்டகொல்ல ஏலவிற்பனைக் காணியில் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணியின் அளவு 77 பேர்ச இற்காக லொட் இலக்கம் 15, 16, 17, 18, 19 ஆகிய துண்டுகளில் பிரதேச சபைக்கு பொது நடவடிக்கைகளுக்காக கையளிக்குமாறு அறிவித்து துண்டுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பிரதேச சபைக்கு உறுதியொன்று மூலம் கையளிப்பதற்கான கோவைகள் காணப்படவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட பிரகாரம் பிரதேச சபைக்குரிய பொதுக் காணிப் பகுதி துண்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உறுதி மூலம் சபைக்கு கையளிக்கப்பட்டதாக கோவையில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | கோவையின் பிரகாரம் 77 பேர்ச் பொது நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டில் சபை நிதியத்தின் மூலம் | அதிக வெப்ப நிலைமையை சுவரின் | வயலொன்றில் நிர்மாணமொன்று |

| | | | |
|---|---|---|---|
| | கொடிகம்புவ நிர்மாணத்திற்காக ரூபா 606,824 தொகை செலவிடப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. வயல் காணி உரிமையாளரிடமிருந்து கையேற்காமல் இந்த நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த பாதம் உறுதியற்றால் இந்த உடைந்து விழுந்திருந்த போதிலும் இங்கு எவ்வித மேற்பார்வையொன்றும் தொழில்நுட்பமும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. சபைக்கு ரூபா 606,824 நட்டம் இடம்பெற்றிருந்த போதிலும் இந்நட்டம் தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உறுதித் தன்மைக்கு பாதிப்பு ஏற்பட்ட காரணத்தினால் சுவர் விழுந்துள்ளது. நிர்மாணத்திலிருந்து 06 மாதங்கள் அளவில் அதாவது வெள்ளத்திற்கு பின்னரும் எவ்வித ஆபத்தும் காணப்படவில்லை. திட்டமிடப்பட்ட வகையில் வயல் மட்டத்திலிருந்து 750 மில்லிமீற்றர் ஆழத்தில் அத்திவாரம் வெட்டப்பட்டிருந்ததுடன் மிக சிறிய கூடுதல் குறைவு இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்ளலாம். | மேற்கொள்ளும் போது நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு இருக்க வேண்டும். சுவர் முழுமையாக இடிந்து விழுந்துள்ளதால் சுவர் தரமற்றதாக நிர்மாணிக்கப் பட்டிருந்தது. இதன் நட்டத்தை குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டு சபை நிதியத்தின் மூலம் பந்தாவ எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகே செல்லும் பாதை தாரிட்டு தயாரிப்பதற்காக ரூபா 297,403 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கோவைகள் மற்றும் பௌதீக பரிசோதனையின் போது சபை நிதியத்தை பயன்படுத்தி செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காக கூடுதலான நலனாளிகள் கிடைக்கும் வகையில் செயற்திட்டத்தை தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் இச்செயற்திட்டம் பொல்கஹவெல பிரதேச சபை உறுப்பினர்களின் தனிப்பட்ட வீதிக்கு செல்லும் வீதி அபிவிருத்திக்காக செய்யப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த வீதி கௌரவ உறுப்பினரின் வேண்டுகோளின் பெயரில் 2021 ஏப்ரல் 05 ஆந் திகதி நடைபெற்ற அபிவிருத்தி செயற்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் தாரிட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது. இது உறுப்பினரின் நிதியேற்பாட்டின் கீழ் முன்மொழியப்பட்ட அங்கீகரிக்கப்பட்டிருந்த செயற்திட்டமொன்றாக இருந்ததுடன் இது தொடர்பாக பொதுச் சபையில் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபையை நிதியத்தை ஈடுபடுத்தி செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது கூடிய நலன்கள் நலனாளிகளுக்கு கிடைக்கும் வகையில் செயற்திட்டம் தெரிவு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2013 ஆம் ஆண்டிலிருந்து கலபடகம மயானத்திற்காக மதிலொன்றை நிர்மாணித்து | 2021 மே 13 மற்றும் 14 ஆந் திகதிகளில் காணப்பட்ட அதிக மழை | நியமத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் |

ரூபா 523,323 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் தொடர்பாக 2022 மார்ச் 10 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது சுவர் விழுந்து சேதமடைந்திருந்தது. தரமில்லாமல் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணம் காரணமாக இந்த சேதம் இடம்பெற்றிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

காரணமாக இந்த சுவரின் நடுப்பகுதி நீர் அழுத்தத்தினால் நீர் செல்ல முடியாததன் மூலம் நிலத்தின் உயர்மட்ட பகுதி உடைந்திருந்தது. சுவர் இடிந்து செல்வதற்கு காரணம் தரமற்ற நிர்மாண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது அல்லது அதிக மழையே என குறிப்பிடுகின்றேன்.

மேற்கொள்ளப்படல் வேண்டும்.